# இலங்கையில் சமத்துவமாக தடுப்பூசி வழங்குதல் சார்ந்த பல்வேறுபட்ட தாக்கங்கள்

நவம்பர் 2021

## ஆய்வுக் கண்ணோட்டமும் சூழ்நிலையும்

- கோவிட் - 19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கை, தடுப்பூசி ஏற்றுதல், தடுப்பூசிகளை அணுகுதல் தொடர்பான விடயங்களில் இலங்கையில் உள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனக் குழுக்கள் ஒன்லைன் ஊடாகப் பகிர்ந்து கொண்டுள்ள விடயங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் சமூக ஊடகக் கண்காணிப்பு ஆய்வொன்றினை முன்னெடுப்பதற்கான பொறுப்பினை சர்வதேச சிறுபான்மை உரிமைகள் குழு (Minority Rights Group International) வெரிட்டே ரிசர்ச் (Verité Research) நிறுவனத்திற்கு வழங்கியது. 74.9 வீத மக்கள் தொகையைக் கொண்ட சிங்கள சமூகம் பெரும்பான்மை இனமாகவும், சிங்களம் அவர்களின் முதல் மொழியாகக் கருதப்படுகின்றது. தமிழ் மற்றும் முஸ்லிம் இன - மத சிறுபான்மையினர் 24.8 வீதமான மக்கள் தொகையாகவுள்ளனர்.[1] தமிழ் சமூகம் மற்றும் இலங்கையின் பெரும்பான்மையான முஸ்லிம் சமூகத்தினரின் முதல் மொழியாகத் தமிழ் கருதப்படுகின்றது. இலங்கையின் இணைப்பு மொழியான ஆங்கிலமும் 22 வீத இலங்கையர்களால் பயன்படுத்தப்படுகின்றது.[2]

- இவ்வாய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களானது, குறிப்பாக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியில் இருந்து 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முகப் புத்தகம் (Facebook) மற்றும் டுவிட்டர் (Twitter), சமூகத் தளங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது. சமூக ஊடகங்களில் இருந்து தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான கருவிகளான் CrowdTangle என்பவற்றைஉபயோகித்து முக்கியமான சொற்களின் தொகுதி ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் பிரித்தெடுக்கப்பட்டன.

- இவ்வறிக்கைக்காக, (n=1,276) முகப் புத்தகக் கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகளுக்கு வழங்கப்பட்ட பதில்கள் உட்பட்ட டுவிட்டர் பதிவுகள் (tweets) என்பவற்றினூடாக நபர்கள் மத்தியிலான செய்திகள் மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கான சுற்றுச் சூழல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன: (1) கோவிட் - 19 தடுப்பூசி மீதான நம்பிக்கை, (2) தடுப்பூசிக்கான முன்பதிவு, (3) தடுப்பூசிகளுக்கான அணுகல் (4) தடுப்பூசி தொடர்பான தகவல்களை வெளியிடுதல் மற்றும் தடுப்பூசி சார்ந்த விடயங்களை நிர்வகித்தல் தொடர்பான விடயங்களில் சுகாதாரத் துறையினர் மற்றும் ஏனைய அரச துறையினர் மீதான அவநம்பிக்கை.

- முகப் புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகள் (tweets) இரண்டு தர நிலைகளின் அடிப்படையில் மதிப்பீட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன: (1) மேற் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான மனோபாவம் சார்ந்த சான்றுகள், (2) முகப் புத்தகக் கருத்தினை / டுவிட் (tweet) தகவலை வெளியிட்டுள்ள நபரின் இனத்தை அறியும் ஆற்றல். எனவே இவ்வறிக்கையானது, சமூக ஊடகங்களை உபயோகிப்பவர்களில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களைச் சேர்ந்தவர்கள், சமூகத்தின் மத்தியில் வெளியிட்டுள்ள முகப் புத்தகக் கருத்தினை / டுவிட் தகவல்கள் குறித்தான உண்மையான மன நிலையினை நுண்ணாய்விற்கு உட்படுத்துவதோடு தன்னை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளதே அன்றி ஒட்டு மொத்த சமூகத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமையவில்லை.

- எனவே ஆய்விற்கான மாதிரிகளைத் தெரிவு செய்யும் நடைமுறையானது, சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்துபவர்கள் பக்கச் சார்பற்ற பிரதநிதித்துவம் வகிப்பவர்கள் என்னும் உத்தரவாதத்தினை அளிக்கவில்லை. உயர் நம்பிக்கை மிக்கவர்கள் இத்தகைய கருத்துப் பரிமாற்றங்களில் தமது கருத்துத் தெரிவிப்பது மிகவும் குறைவு. எனவே ஆய்விற்கான மாதிரியில் அவர்களது பிரிதிநிதித்துவமானது மிகவும் குறைவாகவே குறிப்பிடப்படும்.

- எவ்வாறாயினும் சமூக ஊடகங்களும் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிட்டு செயல் திறன் மிக்கவர்களாக விளங்குபவர்களும் தமது இனச் சார்பானவர்களாக காணப்படவில்லை என்பதனையே பகுப்பாய்வு கருத்தில் கொள்ள வேண்டி உள்ளது. இவ் வகையில் பார்க்கும் போது, மாதிரியாகக் கொள்ளப்பட்டுள்ள கருத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள உணர்வுகளின் இன ரீதியான வேறுபாடுகளானது, பரந்தளவிலான மக்கள் சமூகத்தின் மத்தியில் நிலவுகின்ற இனம் சார்ந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் மதிப்பீடு செய்ய முடியும்.

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், ‘மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2012 - இறுதி அறிக்கை’ பார்க்க: http://www.statistics.gov.lk/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport (இறுதியாக அணுகியது டிசம்பர் 8, 2021).

2 அஷானி அபயசேகர, ‘அதிக ஆங்கில எழுத்தறிவு கொண்ட இலங்கையை கட்டியெழுப்புதல்: ஏற்றத்தாழ்வுகளை எதிர்ப்பதற்கான தேவை, 23 ஏப்ரல், 2018, பார்க்க: https://www.ips.lk/talkingeconomics/2018/04/23/building-a-more-english-literate-sri-lanka-the-need-to-combat-inequities/ (இறுதியாக அணுகியது டிசம்பர் 8, 2021).

- இலங்கை தனது கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் நடைமுறையினை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அன்று ஆரம்பித்தது.[3] இவ்வறிக்கை எழுதப்படுகின்ற வேளை வரையில் கிடைத்த உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களுக்கு இணங்க இலங்கையின் மொத்த சனத் தொகையில் 16 வயதிற்கு மேற்பட்டவர்களில் 84% மானவர்கள இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.[4] இலங்கையின் சுகாதாரத்துறை அதிகாரிகள் முன்களப் பணியாளர்களுக்கும், 60 வயதானவர்களுக்கும், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசியை (மூன்றாவது தடுப்பூசி) வழங்கும் பணிகளை சமீபத்தில் ஆரம்பித்துள்ளனர்.[5]

## ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான சாராம்சம்

1. **கோவிட் - 19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கை தொடர்பான அக்கறைகளானது, தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்கள் மத்தியிலான ஒன்லைன் உரையாடல்கள் ஆதிக்கம் செலுத்தும் விடயமாக விளங்குகின்றது. தடுப்பூசிகளை அணுகுவது தொடர்பான சிக்கல்கள் மற்றும் அதிகாரிகள் மீதான அவநம்பி -க்கை என்னும் விடயங்களானது ஓரளவு இழுவை நிலையைப் பெற்ற விடயங்களாக விளங்குகின்றன.**
   - பகுப்பாய்வு செய்யப்பட்ட மொத்த மாதிரிக் கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகளில் (n = 1,276), 85% மான முகப் புத்தகக் கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகளானது, கோவிட் - 19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கை சார்ந்த உரையாடல்களாக அமைய, 36% மான கருத்துரைகளானது தடுப்பூசிளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பானவையாகவும், 29% மான கருத்துரைகளானது சுகாதாரத் துறையினர் மற்றும் அதிகாரம் மிக்க ஏனைய அரச துறையினர் மீதான அவநம்பிக்கை தொடர்பானவையாகவும் விளங்குகின்றன.[6]
2. **சமூக ஊடகங்களை உபயோகிக்கும் சிங்கள இனத்தவர்களோடு ஒப்பிடும் போது தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்கள் கோவிட் - 19 தடுப்பூசி மீது மிகக் குறைந்தளவான நம்பிக்கையைக் கொண்டவர்களாகவோ அல்லது நம்பிக்கை அற்றவர்களாகவோ விளங்குகின்றனர்.**
3. **கோவிட் - 19 தடுப்பூசி மீது மிகக் குறைந்தளவான நம்பிக்கையைக் கொண்டவர்களுக்கு இடையிலான கருத்துப் பரிமாற்றங்களில், தடுப்பூசி பாதுகாப்பானதா என்பது தொடர்பான சந்தேகங்களானது ஆதிக்கம் செலுத்துகின்றன.**
4. **சமூக ஊடகங்களை உபயோகிக்கும் முஸ்லிம் சமூகத்தைச் சோர்ந்தவர்கள் கோவிட் - 19 தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்து தமது அக்கறைகளைத் தெரிவித்துள்ளனர்.**
5. **சமூக ஊடகங்களை உபயோகிக்கும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் சினோபார்ம் (Sinopharm) தடுப்பூசியிலும் பார்க்க பைசர்-பயோன் டெக் (Pfizer-BioNTech) மற்றும் மொடோனா (Moderna) தடுப்பூசிகளில் அதிகளவான நம்பிக்கையைக் காட்டுகின்றனர்.**

## புள்ளி விபர ரீதியில் இலங்கையில் கோவிட் - 19 தடுப்பூசிகள் மீதான நம்பிக்கையின் அளவைப் பாதிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரணியாக இனம் விளங்குகிறது

- கோவிட் - 19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கையை மதிப்பிடுவதற்கான மாதிரியாக அமையும் முகப் புத்தகக் கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகளில் (n = 1,081) இனை மதிப்பீடு செய்ததில் 28% அதிகளவான நம்பிக்கையை வெளிப்படுத்தியது. இந்த அளவானது கோவிட் - 19 தடுப்பூசி குறித்து மூன்று இனக் குழுக்கள் மத்தியில் நடத்தப்பட்ட கண்காணிப்பிற்க இணங்க குறைந்தளவு நம்பிக்கை அல்லது நம்பிக்கை இல்லை எனக் குறிப்பிடும் முகப் புத்தகக் கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகளிலும்[7] இரண்டு மடங்கு (48%) அதிகமாகக் காணப்படுகின்றது.
- கோவிட் - 19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கையைப் பாதிக்கும் புள்ளிவிபர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக இனம் காணப்படுகின்றதா என்பதனைத் தீர்மானிப்பதற்கு பியர்சனின் Chi-squared சோதனை முறை பயன்படுத்தப்பட்டது. இச் சோதனை முறையின் முடிவுகளானது (p value = 1.212e-08) கோவிட் - 19 தடுப்பூசி தொடர்பான நம்பிக்கையானது சமூக ஊடகங்களை பயன்படுத்துபவர்களின் இனத்தில் தங்கி உள்ளது என்பதற்கான வலிமையான ஆதாரமாக விளங்குவதனைச் சுட்டிக்காட்டுகின்றது.[8]

3 அரச புலனாய்வு சேவை, 'கோவிட்-19 தடுப்பூசி இலங்கை அணுகுமுறை', இலங்கையின் ஜனாதிபதி செயலகம், 24 ஆகஸ்ட் 2021, பார்க்க: http://www.presidentsoffice.gov.lk/.Documents/Concept%20Paper-COVID%2019_Vaccination-Sri_Lankan_Approach.pdf. (இறுதியாக அணுகியது நவம்பர் 29, 2021)

4 'இலங்கையின் நோயெதிர்ப்பு செயல்பட்டு சுதந்திரம்' அதிகாரப்பூர்வ இணையதளம், 'தடுப்பூசி புள்ளிவிபரம்' பார்க்க: https://covid19.gov.lk/vaccination-statistics.html. (இறுதியாக அணுகியது நவம்பர் 29, 2021).

5 'நவம்பர் 01 முதல் பூஸ்டர் டோஸ்', அக்டோபர் 2021, இலங்கையின் ஜனாதிபதி செயலகம், பார்க்க: https://www.presidentsoffice.gov.lk/index.php/2021/10/22/booster-dose-from-november-01/. (இறுதியாக அணுகியது (நவம்பர் 29, 2021).

6 குறிப்பு: ஒரு கருத்து மற்றும்அல்லது ட்வீட் மேலும் மதிப்பீடு செய்யப்படலாம். ஆய்வின் இலக்கு பகுதிகளில் ஒன்றை விட-அதாவது தடுப்பூசி நம்பிக்கை, தடுப்பூசிகளுக்கான அணுகல் அல்லது அதிகாரிகள் மீதான அவநம்பிக்கை. எனவே, ஒவ்வொரு வகையிலும் கணக்கிடப்பட்ட மொத்த கருத்துகள்ட்வீட்டுகள் கருத்துகள் மற்றும் ட்வீட்களின் மொத்த மாதிரியை விட அதிகமாக இருக்கலாம்.

7 குறைந்த நம்பிக்கை என்பது சில அவநம்பிக்கையை வெளிப்படுத்துபவர்கள் என வரையறுக்கப்படுகிறது கோவிட்-19 தடுப்பூசிகள் ஏதேனும் கிடைக்குமா என்ற சந்தேகம். தடுப்பூசி மீது முழுமையான அவநம்பிக்கையை வெளிப்படுத்துபவர்கள் மற்றும் கோவிட்-19 தடுப்பூசிகளில் ஏதேனும் ஒன்றை எடுக்கபெற மறுப்பவர்கள் என நம்பிக்கை இல்லை என வரையறுக்கப்படுகிறது.

8 குறிப்பு: தடுப்பூசிகள் மீதான நம்பிக்கையை மதிப்பிட முடியாத கருத்துகள் மற்றும் ட்வீட்கள் மேற்கண்ட பகுப்பாய்வில் கருதப்படவில்லை.

- சமூக ஊடகங்களை பயன்படுத்தும் சிங்கள இனத்தவர்களோடு (24%) ஒப்பிடும் போது, சமூக ஊடகங்களை பயன்படுத்தும் முஸ்லிம் இனத்தவர்கள் (49%) மற்றும் தமிழ் இனத்தவர்கள் (36%) குறைந்தளவான நம்பிக்கையினையே கொண்டவர்களாக உள்ளனர். எனவே சமூக ஊடகங்களை உபயோகிப்பவர்களுள் சிறுபான்மை இன சமூகங்களைச் சேர்ந்தவர்கள் கோவிட் - 19 தடுப்பூசி மீது கொண்டுள்ள நம்பிக்கை மட்டம் மிகவும் குறைவாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும் அதேவேளை, சமூக ஊடகங்களை உபயோகிக்கும் பெரும்பான்மைச் சிங்கள இன சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மத்தியில் கோவிட் - 19 தடுப்பூசி மீது கொண்டுள்ள நம்பிக்கை மட்டம் மிகவும் அதிகமாகக் (42%) காணப்படுகின்றது (விளக்கப்படம் 1 இனைப் பார்க்கவும்).

- அதேவேளை சமூக ஊடகங்களை உபயோகிப்பவர்களில் கோவிட் - 19 தடுப்பூசி மீது "நம்பிக்கை இல்லை" என்னும் கருத்தை மூன்று இனக் குழுக்களில் இருந்தும் வெளியிட்டவர்கள் ஏறத்தாழ சமமானவர்களாகவே விளங்குகின்றனர்.

**விளக்கப்படம் 1:** இனத்தின் அடிப்படையில் தடுப்பூசி மீதான நம்பிக்கை




## குறைந்த நம்பிக்கையின் கீழ்நோக்கிய போக்கும் நம்பிக்கை இன்மையின் தொடர்ச்சியான போக்கும்

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் நடைமுறையினை இலங்கையில் ஆரம்பித்தது முதல், சமூக ஊடகங்களை உபயோகிக்கும் மூன்று இனக் குழுக்களில் இருந்தும் கோவிட் - 19 தடுப்பூசி மீது கொண்டுள்ள நம்பிக்கை மட்டம் மிகவும் குறைவாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் வீழ்ச்சி அடைந்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது (விளக்கப்படம் 2 இனைப் பார்க்கவும்). ஆய்வில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இவ்விடயங்கள், 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் முடிவடையும் காலப்பகுதிக்குள் துரிதப்படுத்தப்பட்ட தடுப்பூசி வழங்கல் வீதத்துடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது.[9]

- அதேவேளை சமூக ஊடகங்களை உபயோகிப்பவர்களில் கோவிட் - 19 தடுப்பூசி மீது "நம்பிக்கை இல்லை" என்னும் கருத்தினை வெளியிட்டவர்களது எண்ணிக்கையில் 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதியில் ஓரளவு அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் பெரும்பாலும் மாற்றமின்றி காணப்படுகின்றது (விளக்கப்படம் 3 இனைப் பார்க்கவும்). இலங்கையில் தடுப்பூசி போடுதல் ஜனவரியில் தொடங்கப்பட்டாலும், 2021, மார்ச் 2021 இல் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடுவது பெரும்பாலும் தொடங்கியது. எனவே, மார்ச்-ஏப்ரல் மாதங்களில் காணப்பட்ட அதிகரிப்பு இந்த மைல்கல்லைச் சுற்றி வெளிப்பட்ட புதிய உரையாடல்களுக்கு ஒத்ததாக இருக்கலாம்.[10] இலங்கை 20-30 வயதுடையவர்களுக்கு 2021 செப்டம்பரில் தடுப்பூசி போடத் தொடங்கியது, மேலும் செப்டம்பரில் ஏற்படும் அதிகரிப்பானது, இந்த வயதினரில் காணப்பட்ட அதிக அளவிலான தடுப்பூசி தொடர்பான தயக்கத்தை காட்டுகின்றது.[11]

**விளக்கப்படம் 2:** 2021 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் கோவிட்-19 தடுப்பூசி மீதான குறைந்த நம்பிக்கை




குறிப்பு: 2021 ஜனவரி முதல் செப்டம்பர் வரை குறைந்தபட்சம் ஒரு முறை கோவிட் - 19 தடுப்பூசியைப் பெற்ற இலங்கை மக்கள்தொகையின் சதவீதத்தையும் வரைபடம் 2 காட்டுகிறது (ஆதாரம்: இலங்கை சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் அதிகாரப்பூர்வ இணையதளம் பார்க்க; https//www.epid.gov.lk/)

9 செப்டம்பர் 27, 2021 இன் வெரிடே ரிசர்ச் இன் கோவிட்-19 தடுப்பூசி ஸ்கோர்போர்டைப் பார்க்கவும் https://twitter.com/factchecklka/status/1442492284428189701?s=20).

10 டிலான் உதயங்க, 'இலங்கையில் கோவிட்-19க்கு எதிராக தடுப்பூசி போடுதல்: நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தும்', 8 ஏப்ரல் 2021, இங்கே கிடைக்கும்: https://www.durdans.com/getting-vaccinated-against-covid-19-in-sri-lanka-all you-need-to-know/ [இறுதியாக அணுகியது 8 டிசம்பர் 2021].

11 சங்க ஜயசிங்க, 'இலங்கை சுகாதார அதிகாரிகள் இளைஞர்களிடம் தடுப்பூசி போட வேண்டும் எனக் கோரினர்', 22 செப்டம்பர் 2021, பார்க்க: https://Economynext.com/sri-lanka-health-authorities-plead-with-Young-people-to-get-vaccinated-86359/ [இறுதியாக அணுகியது 29 நவம்பர் 2021].

**விளக்கப்படம் 3:** 2021 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கையில்லை




குறிப்பு: இவ்வாய்வானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியில் இருந்து 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும் விகிதங்கள் அதிகரித்துள்ள நிலையில், சமூக ஊடகங்களை உபயோகிப்பவர்கள் மத்தியில் தடுப்பூசி மீதான நம்பிக்கை மட்டங்களில் மேற்கூறிய போக்குகள் தோன்றி உள்ளமையை ஆய்வின் முடிவுகள் நிரூபிக்கின்றன. மேலும் ஒப்பீட்டு ரீதியில் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான தரவுகளானது மிகவும் சிறு அளவான மாதிரிகளாகக் காணப்படுவதனால் இம் மாதத்திற்கான தரவுகளை உள்வாங்குவது தவிர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## கோவிட் - 19 தடுப்பூசி குறித்து குறைந்தளவு நம்பிக்கையினைக் கொண்டவர்கள் மத்தியில் தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்தான சந்தேகங்கள் ஆதிக்கம் செலுத்துவதாகக் காணப்படகின்றது

- சமூக ஊடகங்களை உபயோகிக்கும் மூன்று இனக் குழுக்கள் மத்தியில் (64%), தடுப்பூசி "மீதான நம்பிக்கை குறைவாகக்" காணப்படுகின்ற மட்டம் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது (விளக்கப்படம் 4 இனைப் பார்க்கவும்). தடுப்பூசிகளின் வேகமான வளர்ச்சி, பக்க விளைவுகள் தொடர்பான பயம், தடுப்பூசிக் கலவை தொடர்பான பயம் போன்ற விடயங்களானது அனைத்து இனக் குழுக்கள் மத்தியிலும் தடுப்பூசிகளின் பாதுகாப்பு குறித்தான கவலையைத் தூண்டியது.
- கோவிட் - 19 தடுப்பூசி மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்தவர்களில் 44% வீதமானவர்கள் மத்தியில், "தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்தான சந்தேகம்" சார்ந்த முன் எண்ணங்களும் ஆதிக்கம் செலுத்துகின்றன. எவ்வாறாயினும், தடுப்பூசி மீது நம்பிக்கை குறைவாக இருப்பதாகக் கூறியவர்களைப் போலன்றி, கோவிட் - 19 தடுப்பூசி மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்தவர்களில் 20% வீதமானவர்கள் மத்தியில் தடுப்பூசி சார்ந்த சதித் திட்டம் தொடர்பான அச்சமும், 12% வீதமானவர்கள் மத்தியில் பாரம்பரிய மருத்துவம் மீதான விருப்பமும் (ஆயுர்வேத மருத்துவம் மற்றும் வீட்டு மருத்துவம்), 3% வீதமானவர்கள் மத்தியில் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி மீதான நம்பிக்கையும் நிலவியது.

**தரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முடிவுகள் (முகப்புத்தகக் கருத்துக்கள் அல்லது டுவிட்டர் பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள்):**

"இந்த வக்சீனின் மூலப் பொருள் என்ன? இதன் பின்னனி என்ன? இதை போடுவதால் ஏற்படும் விளைவுகள் என்ன? இப்படி அறிவுள்ள சமூகமாக கேள்வி கேட்டு விளங்க வேண்டும். முட்டாள்களைப் போல எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கொண்டு செல்ல கூடாது

- முகப்புத்தகத்தை உபயோகிக்கும் ஒரு முஸ்லிம் நபர்

"එන්නත තුල ද ඇත්තේ වෛරස් එකක් මම නම් විදින්නේ නෑ

[மொழிபெயர்ப்பு: தடுப்பூசி தன்னுள்ளே வைரஸைக் கொண்டுள்ளது. அதனால், நான் இதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்]

- முகப்புத்தகத்தை உபயோகிக்கும் ஒரு சிங்கள நபர்

"இப்பதானா ஆய்வு செய்றிங்கோ... முடிவு பண்ணிட்டிங்க சாகடிக்க

– முகப் புத்தகத்தை உபயோகிக்கும் ஒரு தமிழர்

**விளக்கப்படம் 4:** இயற்கையான நோய் எதிர்ப்பு சக்திமீது நம்பிக்கை நம்பிக்கையின்மை மற்றும் குறைந்தளவு நம்பிக்கையால் தடுப்பூசிக்கான முன்பதிவு




குறிப்பு: தடுப்பூசி மீது நம்பிக்கை குறைவாக இருப்பதாகக் குறிப்பிட்ட குழுவினருக்கான ஒதுக்கீடுகளில், 'ஏனையவை' என்னும் பிரிவிற்குள், 'கர்ப்பிணித் தாய்மாருக்கு பாதுகாப்பற்றது', மற்றும் பாரம்பரிய மருத்துவம் மீதான விருப்பம் என்பவை உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், மொத்தமாகக் கருத்துத் தெரிவித்தவர்களில் 5% வீதமானவர்கள் அல்லது அதற்கும் குறைவானவர்கள் மாத்திரமே இவ்வொதுக்கீடுகளைத் தெரிவு செய்திருந்தனர். தடுப்பூசி மீது நம்பிக்கை இல்லை எனக் குறிப்பிட்ட குழுவினருக்கான ஒதுக்கீடுகளில், "ஏனையவை" என்னும் பிரிவிற்குள் 'கருவள

சக்தியில் / பாலியல் ரீதியான செயற்பாடுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்', 'சமய ரீதியான காரணங்கள்', மற்றும் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியில் நம்பிக்கை போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் மொத்த கருத்துக்களில் 5% வீதமானவர்கள் அல்லது அதற்கும் குறைவானவர்கள் மாத்திரமே இவற்றைத் தெரிவு செய்திருந்தனர்.

## சமூக ஊடகத் தளங்களை உபயோகிக்கும் முஸ்லிம்கள் கோவிட் - 19 தடுப்பூசிகளின் பாதுகாப்பு குறித்து பெரிதும் அக்கறை செலுத்துகின்றமையை வெளிப்படுத்தி உள்ளனர்

- கோவிட் - 19 தடுப்பூசிகளை முன்பதிவு செய்து கொள்வதனைப் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தும் முகப்புத்தகக் கருத்துக்கள் மற்றும் டுவிட்டர் பதிவுகளூடாக வெளிப்படுத்தும் மூன்று இனக் குழுக்களினதும் கருத்துக்களை ஒப்பீட்டளவில் பார்க்கும் போது அவற்றுக்கிடையில் ஒரு ஒற்றுமையைக் காணக் கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் சமூக ஊடகங்களை உபயோகிக்கும் சிங்கள (34%) மற்றும் தமிழ் (36%) இனக் குழுக்களைச் சேர்ந்தவர்களிலும் பார்க்க முஸ்லிம்கள் (48%) தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்து பெருமளவான சந்தேகத்தை வெளிப்படுத்தி உள்ளனர் (விளக்கப்படம் 5 இனைப் பார்க்கவும்).

- சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் சிங்கள இனத்தவர்கள் கோவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக பாரம்பரிய மருத்துவ முறைகளான ஆயுர்வேத மற்றும் வீட்டு வைத்தியத்தை உபயோகிப்பதனையே பெரிதும் பரிந்துரைக்கின்றமையானது குறிப்பிடத்தக்க விடயமாகும் (விளக்கப்படம் 5 இனைப் பார்க்கவும்). பாரம்பரிய நாட்டு மருத்துவ சிகிச்சை முறைகள் தமிழ் கலாச்சாரத்திற்குள் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் தமிழ் இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் மத்தியில் இத்தகைய கருத்துப் பரிமாற்றங்கள் எதனையும் காண முடியவில்லை.

**விளக்கப்படம் 5:** இன ரீதியாக தடுப்பூசிக்கான முன்பதிவு




குறிப்பு: 'கர்ப்பிணித் தாய்மாருக்கு பாதுகாப்பற்றது', 'கருவள சக்தியில் / பாலியல் ரீதியான செயற்பாடுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்', 'சமய ரீதியான காரணங்கள்', மற்றும் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியில் நம்பிக்கை போன்றவை "ஏனையவை" என்னும் பிரிவிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் மொத்த கருத்துக்களில் 2% வீதமானவர்கள் அல்லது அதற்கும் குறைவானவர்கள் மாத்திரமே இவற்றைத் தெரிவு செய்திருந்தனர். மேலும் சினோபார்மிலும் பார்க்க ஃபைசர் தடுப்பூசிக்கு உள்ள விருப்பச் சார்பு குறித்தும் ஒதுக்கீடுகள் என்னும் பிரிவின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டது. இதற்கிணங்க சமூக ஊடகங்களை உபயோகிக்கும் முஸ்லிம் இனத்தவர்களில் 18% வீதமானவர்களும், தமிழ் இனத்தவர்களில் 20% வீதமானவர்களும், சிங்கள் இனத்தவர்களில் 29% வீதமானவர்களும், தெரிவித்த கருத்துக்களும் சினோபார்ம் தடுப்பூசியிலும் பார்க்க ஃபைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புவதாகத் தெரிவித்திருந்தனர். எவ்வாறாயினும் இப் பெறுமதிகளானது விளக்கப்படம் 5 இல் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அவை சார்ந்த நம்பிக்கை அல்லது விருப்பத்தெரிவு என்னும் பிரிவின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### தரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முடிவுகள் (முகப்புத்தகக் கருத்துக்கள் அல்லது டுவிட்டர் பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள்):

"Lab rats! 🤔Anyone know about the side effects of the vaccine after few years later? 🔍💉

[ஆய்வுகூட எலிகள்! சில வருடங்களின் பின்னர் இத் தடுப்பூசி எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என யாருக்காவது தெரியுமா]

– சமூகத்தளத்தை உபயோகிப்பவரான ஒரு முஸ்லிம் நபர்

"මම නම් විද්දෙ නෑ වදින්නෙත් නෑ මට කොරෝනා හැදිලා අදට දවස් 12 යි කිසිම අමාරුවක් නෑ සිංහල බෙහෙත් බිව්වා හෙම්බිරිස්සාවක් හැදුණු තරමට වත් අමාරුවක් නෑ තවම ගඳ සුවඳ දැනෙන්නේ නෑ විච්චරයි

[நான் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவும் இல்லை. பெற்றுக் கொள்ளவும் மாட்டேன். எனக்கு கொரோனா நோய் ஏற்பட்டு இன்றோடு 12 நாட்கள் ஆகின்றன. எனக்கு எவ்விதமான வருத்தமும் இல்லை. நான் நாட்டு மருந்துகளை உட்கொண்டேன். தடிமன் ஏற்பட்டால் உள்ள அளவு வருத்தம் கூட எனக்கு இல்லை. எனக்கு இதுவரையில் எவ்விதமான வாசனையோ அல்லது துர்நாற்றமோ விளங்கவில்லை.]

– சமூகத்தளத்தை உபயோகிப்பவரான ஒரு சிங்கள நபர்

"இந்த தடுப்பூசி நல்லதோ கெட்டதோ இனி தெரியவரும். எலிக்கு பரிசோதித்த மாதிரி போட்டாச்சு

– முகப் புத்தகத்தை உபயோகிக்கும் ஒரு தமிழர்

**சமூக ஊடகத் தளங்களை உபயோகிக்கும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த சினோபார்ம் தடுப்பூசியிலும் பார்க்க பைசர் அல்லது மொடோனா தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதில் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர்.**

- தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் "தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிக்கையை" (selective confidence[12]) வெளிப்படுத்தும் வகையில் முகப் புத்தகம் மற்றும் டுவிட்டர் தளங்களில் பகிர்ந்து கொண்டுள்ள கருத்துக்களானது ஒப்பீட்டளவில் ஒரே மாதிரி-யானவையாக இருந்த போதிலும் (விளக்கப்படம் 6 இனைப் பார்க்கவும்), சமூகத் தளங்களை உபயோகிக்கும் முஸ்லிம் இனத்தவர்களுடன் ஒப்பிடும் போது, சமூகத் தளங்களை உபயோகிக்கும் சிங்களம் மற்றும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமக்கு விருப்பமான கோவிட் - 19 தடுப்பூசி வகை ஒன்றினைத் தெரிவு செய்து கொள்வதில் மிகவும் வலிமையாக உள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

**விளக்கப்படம் 6:** இன ரீதியாக உயர்ந்த, தாழ்ந்த, மற்றும் நம்பிக்கையின்மை




- அதன்படி, 'தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிக்கை/விருப்பம்' வெளிப்படுத்திய கருத்துக்களில், 74% முஸ்லிம் சமூக ஊடகப் பாவனையாளர்களும், 72% சிங்கள சமூக ஊடகப் பாவனையாளர்களும், 55% தமிழ் சமூக ஊடகப் பாவனையாளர்களும் சினோபாமை விட ஃபைசர் மற்றும்/ அல்லது மொடோனாவை விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளனர். (குறிப்பு: "தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பம்/நம்பிக்கை"யை வெளிப்படுத்திய மீதமுள்ள 27% கருத்துக்கள், ஃபைசர் மற்றும்/அல்லது மொடோனா தடுப்பூசிகளுக்கான விருப்பத்தைத் தவிர வேறு காரணங்களைக் குறிப்பிடுகின்றன).

- ஒட்டுமொத்தத்தில், சினோபார்ம் தடுப்பூசியின் பாதுகாப்பையும் செயற் திறனையும் ஏற்றுக் கொள்ள மறுத்தல்/ நம்பிக்கை இன்மை என்னும் விடயமானது, மூன்று முக்கிய காரணிகளின் விளைவாகத் தோன்றியதாகும் : (1) சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசியின் தரம் குறித்தான அச்சம், (2) வெளிநாடுகளுக்கான பிரயாணங்களின் போது, சினோபார்ம் தடுப்பூசிக்கு வழங்கப்படும் குறைந்த அங்கீகாரம் மற்றும் (3) சீனாவின் வளர்ச்சி அடைந்து வரும் பொருளாதாரம் மற்றும் இலங்கையின் அரசியல் நிலை (ஆய்வில் கண்டறியப்பட்ட தொடர்புடைய தரம் சார்ந்த முடிவுகளைப் பார்க்கவும்).

**தரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முடிவுகள் (முகப்புத்தகக் கருத்துக்கள் அல்லது டுவிட்டர் பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள்):**

"#Pfizer is only for VIP? Is (it) possible to vaccine the public? Would prefer to have #Pfizer will it be able to vaccine?

[ஃபைசர் தடுப்பூசி VIP க்களுக்கு மாத்திரமா? பொதுமக்களு-க்கும் இத் தடுப்பூசியை வழங்குவது சாத்தியமானதா? ஃபைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றேன் அதனைப் பெற்றுக் கொள்ள முடியுமா?]

– சமூகத்தளத்தை உபயோகிப்பவரான ஒரு முஸ்லிம் நபர்

"බාල බඩු වල හිලක් ඇතේ කිව්වේ කට කහනවට නෙමෙයි. චීනේට ඔනේ වැඩක් නැති බෙහෙත් අපිට දීලා මිනිස්සු මරලා රට අස්ථාවර කරලා ණය වලින්ම අපේ රට අල්ල ගන්න [மலிவான பொருட்களில் ஏதோ ஒரு குறைபாடு இருக்கும் எனக் கூறியது வெறுமனே வாயை வைத்துக் கொண்டிருக்க முடியாமையினால் அல்ல. எவ்விதமான பயனும் இல்லாத மருந்தை இலங்கையர்களுக்கு வழங்கி மக்களைக் கொலை செய்து நாட்டைச் செயலிழக்கச் செய்து கடனைக் கொண்டெ இந்த நாட்டைக் கைப்பற்றிக் கொள்வதற்கே சீனாவிற்கு தேவையாக உள்ளது.]

– முகப் புத்தகத்தை உபயோகிக்கும் ஒரு சிங்கள இனத்தவர்

"சீனாக்காரன் எங்கடா உங்களுக்கு மருந்து தந்தான் அது வெறும் மழைத்தண்ணிதான்

– முகப் புத்தகத்தை உபயோகிக்கும் ஒரு தமிழ் இனத்தவர்

12 தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பம்/நம்பிக்கை வெளிப்படுத்துபவர்கள் என வரையறுக்கப்படுகிறது இருப்பினும், கோவிட்-19 தடுப்பூசியை எடுக்க/பெற சில விருப்பம் உள்ளது அவர்கள் எந்த தடுப்பூசியை எடுக்க/பெற தயாராக இருக்கிறார்கள் என்பதை விட விருப்பம்.

**விளக்கப்படம் 7:** 2021 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் கோவிட்-19 தடுப்பூசி மீதான குறைந்தளவு நம்பிக்கை




குறிப்பு: இவ்வாய்வானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியில் இருந்து 2021 ஆம் அண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும் விகிதங்கள் அதிகரித்துள்ள நிலையில், சமூக உடகங்களை உபயோகிப்பவர்கள் மத்தியில் தடுப்பூசி மீதான நம்பிக்கை மட்டங்களில் மேற்கூறிய போக்குகள் தோன்றி உள்ளமையை ஆய்வின் முடிவுகள் நிரூபிக்கின்றது. மேலும் ஒப்பீட்டு ரீதியில் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான தரவுகளானது மிகவும் சிறு அளவான மாதிரிகளாக் காணப்படுவதனால் இம் மாதத்திற்கான தரவுகளை உள்வாங்குவது தவிர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- இம் மீளாய்வினை மேற்கொண்ட கால கட்டத்தில் சமூக ஊடகங்களை உபயோகிப்பவர்கள் மத்தியிலான தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிக்கையின் மட்டமானது மேல் நோக்கிய போக்கினைக் கொண்டதாக விளங்கியமையினை வரைபடம் 7 சுட்டிக் காட்டுகின்றது. 20 வயதானவர்களுக்கும் அதற்க மேற்பட்டவர்களுக்கம் தடுப்பூசியை வழங்குவது தொடர்பாக இலங்கையின் சுகாதாரத் துறை அதிகாரிகள் எடுத்துள்ள தீர்மானத்திற்க இணங்க இவ்வாய்வில் கண்டறியப்பட்ட விடயங்களானது எதிர்பாரா வகையில் ஒரே சமயத்தில் நிகழ்வதாகக் காணப்படுகின்றமையானது குறிப்பிடத்தக்க விடயமாகும்.[13] ∴பைசர் தடுப்பூசியானது அதிக செயலத் திறன் மிக்கது என்ற ஒரு நம்பிக்கையைக் கொண்டிருப்பதனால், இலங்கையில் உள்ள அனைத்து இனக் குழுக்களையும் சேர்ந்த இளைஞர்கள் அத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.[14]

## நன்றிகள்

இவ்வறிக்கையானது, வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் ஊடகக் குழுவினரால் (Media Team) தொகுக்கப்பட்ட அறிக்கையாகும். இவ்வறிக்கையைத் தொகுக்கும் பணியில் மஹோஷதி பீரிஸ் அவர்கள் பிரதான ஆய்வாளராகவும், ஆசிரியராகவும் விளங்கியதோடு, ரத்திக்கா பர்னாந்து அவர்கள் ஆய்விற்கான ஒருங்கிணைப்பு முகாமையானராக விளங்கினார். ஆஷவின் பெரேரா அவர்கள் தரவுகளின் அளவு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கத் தேவையான ஒத்துழைப்பை வழங்கினார். முன்னோடி ஆய்விற்கான ஆதரவை, ரத்திக்கா பர்னாந்து, தேஷித்த கதிரகொன்ன, அமந்தீ புஸ்சேபிட்டிய, கௌரி சாமுவேல் ஆகியோர் வழங்கினர். தீபாஞ்சலி அபேவர்தன மற்றும் நிஷான் டி மெல் ஆகியோர் ஆய்விற்கான ஒட்டுமொத்த மேற்பார்வையை வழங்கினர். ஏட்ரியன் மாக்கஸ் அவர்களால் இன்போ கிரபிக்ஸ் வழங்கப்பட்டது. தினுக் சேனபத்திரண அவர்கள் வடிவமைப்புப் பணிகளை வழங்கினார். திட்டக் குறிப்புகளையும் கருத்துக்களையும் மதிப்பாய்வு செய்தல்; மற்றும் தமது கருத்துக்களை வழங்கியமைக்காகவும் மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு நன்றி கூறுவதற்கு ஆசிரியர் கடமைப்பட்டவராகவும் நன்றி மிக்கவராகவும் விளங்குகின்றார்.

minority rights group international

இந்த உள்ளடக்கம் வெரிட்டே ரிசர்ச்சின் முழுப் பொறுப்புடைமையாகும். எந்த சூழ்நிலையிலும் சர்வதேச சிறுபான்மை உரிமைகள் குழுவின் நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாக கருதப்படக்கூடாது

13 ‘அக்டோபர் 21 முதல் 18 மற்றும் 19 வயதுடைய குழந்தைகளுக்கு தடுப்பூசி’, இலங்கை ஜனாதிபதி செயலகம், செப்டம்பர் 2021, பார்க்க: https://www.presidentsoffice.gov.lk/index.php/2021/10/08/vacci nation-of-children-aged-18-and-19-from-october-21/ [இறுதியாக அணுகியது 29 நவம்பர் 2021].

14 சங்க ஜயசிங்க, ‘இலங்கை சுகாதார அதிகாரிகள் இளைஞர்களிடம் தடுப்பூசி போட வேண்டும் எனக் கோரினர்’, 22 செப்டம்பர் 2021, பார்க்க: https://Economynext.com/sri-lanka-health-authorities-plead-with-Young people-to-get-vaccinated-86359/ [இறுதியாக அணுகியது 29 நவம்பர் 2021].